# METRO PEOPLE

## FORTNIGHTLY MAGAZINE


ENGLISH & TAMIL FORTNIGHTLY | ஆங்கிலம் மற்றும் தமிழ் மாதமிருமுறை

01-15 ஜூலை 2021 | மலர் 2 - இதழ் 13 | விலை - ரூ. 2/- | 8 பக்கங்கள்

01-15 JULY 2021 | VOLUME 2 - ISSUE 13 | PRICE - Rs.2/- | 8 PAGES

## தங்குவதற்கு இடமில்லாமல் தவித்த வந்த காவலாளிகளுக்கு இலவசமாக வீடு வழங்கி உதவிய பாலகிருஷ்ணன் அறக்கட்டளை





சென்னை நுங்கம்பாக்கம் ஜோசியர் தெருவில் பாலகிருஷ்ணன் அறக்கட்டளை 10 வருடமாக இயங்கி வருகிறது. இதன் நிறுவனராக சுகுமார் பாலகிருஷ்ணன் என்பவர் திறம்பட, மனித நேயத்தோடு பல்வேறு சமூக பணிகளை செய்து வருகிறார். குறிப்பாக ஏழை, எளிய மாணவ, மாணவிகளுக்கு கல்வி உதவித் தொகை, கொரோனா பேரிடர் ஊரடங்கு காலத்தில் வாழ்வாதாரம் இழந்து தவித்து வரும் நலிந்த, எளிய பொது மக்கள் மற்றும் முதியோர்களுக்கு நிவாரண பொருட்கள் மற்றும் நிவாரண உதவிகள் வழங்குவது, பெண்கள் முதியோர் காப்பகத்திற்கு தேவையான உதவிகள் செய்வது போன்ற உதவிகளை அறக்கட்டளை மூலம் நிர்வாகிகளுடன் இணைந்து சிறப்பாக செய்து வருகிறார். இதன் ஒரு பகுதியாக நுங்கம்பாக்கம், ஜோசியர் தெருவில் உள்ள ரியல் என்க்ளேவ் என்கிற வணிக கட்டிட வளாகத்தில் காவலாளிகளாக பணி புரிந்து வரும் கோவிந்தா மற்றும் ஜனகராஜ் குடும்பத்தினர் தங்குவதற்கு போதிய இடமில்லாமல் தவித்து வந்ததை அறிந்து உடனடியாக 5 லட்சம் மதிப்புள்ள இலவசமாக கான்கிரீட் வீடு வழங்கும் நிகழ்வு சுகுமார் பாலகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் நடைப்பெற்றது. மேலும் இந்த நிகழ்வின் முக்கிய அங்கமாக நிர்வாகி சுதா சுகுமார் பாலகிருஷ்ணன் அவர்கள் காவலாளிகள் குடும்பத்தினருக்கு வீட்டிற்கான சாவியை வழங்கினார். இந்த நிகழ்வில் அறக்கட்டளை நிர்வாகிகளான சுரேந்திரன். செந்தில் அருள், துரை, ரவிக்குமார், சீனிவாசன், ஹரி மற்றும் தமிழக வாகன ஓட்டுநர்கள் நலச்சங்கத்தின் துணைத் தலைவர் மாதேஷ்வரன் ஆகியோர் கலந்துக் கொண்டனர்.

## இந்தியாவில் சுமார் 16 மாதங்களாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சர்வதேச விமான சேவை தடை ஜூலை 31ம் தேதி வரை நீட்டிப்பு !

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் வெளிநாட்டு விமான சேவைகளுக்கான தடை ஜூலை 31ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக இந்திய விமான சேவை பொது இயக்குநரகம் தெரிவித்துள்ளது. இந்தியாவில் கடந்த ஆண்டு மார்ச் 23 முதல் கொரோனா பரவல் காரணமாக சர்வதேச விமானங்கள் நிறுத்தப்பட்டன. இந்தியாவில் இருந்து செல்லும் விமானங்களுக்கும் தடை நீட்டிக்கப்பட்டு வந்துள்ளது. நாடு முழுவதும் சுமார் ஒரு வருட காலத்திற்கும் மேலாக கொரோனா என்னும் கொடிய வகை வைரஸ் மக்களிடையே மிக அதிக அளவிலான பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது.

இதன் காரணமாக கடந்த ஆண்டு மார்ச் மாதம் முதல் மத்திய மற்றும் மாநில அரசுகள் பல்வேறு கட்ட கட்டுப்பாடுகளை விதித்து வருகிறது. மேலும் தற்போது பல்வேறு மாநிலங்களிலும் கட்டுப்பாடுகள் அடங்கிய ஊரடங்கு அமலில் இருந்து வருகிறது. இதனால் ரயில், விமான, பேருந்து உள்ளிட்ட பொதுப்போக்குவரத்து சேவை முற்றிலுமாக பாதிக்கப்பட்டுள்ளது.

## தமிழகத்தின் புதிய சட்டம் ஒழுங்கு டிஜிபியாக சைலேந்திரபாபு நியமனம்!




1987 ஆம் ஆண்டு தமிழக கேடரில் ஐ.பி.எஸ் அதிகாரியாக தேர்வு பெற்ற சைலேந்திரபாபு, தர்மபுரி மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளராக பணியை தொடங்கியவர். அதன் பின்னர், துணை ஆணையர், இணை ஆணையர், ஆணையர், வடக்கு மண்டல ஐஜி, சிறைத் துறை ஏ.டி.ஜி.பி. என பல்வேறு பதவிகளை வகித்துள்ளார்

தமிழ்நாடு டிஜிபியாக உள்ள திரிபாதி நாளையுடன் ஓய்வுப்பெறுவதால் புதிய சட்டம் ஒழுங்கு டிஜிபியை தேர்வு செய்யும் பணிகள் சில நாட்களாக நடந்து வந்தது. டிஜிபி பதவியை கைபற்ற கடுமையான போட்டி நிலவி வரும் நிலையில், அது தொடர்பான பட்டியலை மத்திய பணியாளர் தேர்வாணையத்திற்கு தமிழக அரசு அனுப்பியது. இந்நிலையில், பிஎஸ்சியிலிருந்து வந்த பட்டியல் அடிப்படையில் புதிய சட்டம் ஒழுங்கு டிஜிபியாக சைலேந்திரபாபுவை நியமித்து அரசு அறிவித்துள்ளது.

1987 ஆம் ஆண்டு தமிழக கேடரில் ஐ.பி.எஸ் அதிகாரியாக தேர்வு பெற்ற சைலேந்திரபாபு, தர்மபுரி மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளராக பணியை தொடங்கியவர். அதன் பின்னர், துணை ஆணையர், இணை ஆணையர், ஆணையர், வடக்கு மண்டல ஐஜி, சிறைத் துறை ஏ.டி.ஜி.பி. என பல்வேறு பதவிகளை வகித்துள்ளார்.

சைலேந்திர பாபு, தற்போது ரயில்வே துறை டிஜிபியாக தற்போது பணியாற்றி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

*தமிழக அரசுக்கு உயர்நீதிமன்றம் அறிவுறுத்தல்*

## நீட் விவகாரத்தில் உச்சநீதிமன்ற தீர்ப்புக்கு முரணான நிலையை எடுக்க முடியாது

தமிழகத்தில் நீட் தேர்வின் தாக்கம் குறித்தும், ஏழை மற்றும் கிராமப்புற மாணவர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துகிறதா என்பது குறித்தும் ஆய்வு செய்து அறிக்கை அளிக்க, ஓய்வு பெற்ற நீதிபதி ஏ.கே.ராஜன் தலைமையில், ஒன்பது பேர் அடங்கிய குழுவை தமிழக அரசு நியமித்துள்ளது. நீட் தேர்வு பாதிப்பை ஏற்படுத்துகிறது என்றால், மாற்று வழி குறித்தும், அதை அமல்படுத்துவதற்கான சட்ட நடவடிக்கைகள் குறித்தும் ஒரு மாதத்தில் அறிக்கை அளிக்க வேண்டும் என அரசாணையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த அரசாணைக்கு தடை விதிக்க கோரியும், அதை ரத்து செய்யக் கோரியும், தமிழக பா.ஜ.க பிரமுகர் சார்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நாடாளுமன்றம் நிறைவேற்றிய சட்டத்துக்கு முரணாக மாநில அரசு செயல்பட முடியாது எனவும், உச்சநீதிமன்ற உத்தரவுகளின் அடிப்படையிலும், தேசிய நலனின் அடிப்படையிலும், நீட் தேர்வு கொண்டு வரப்பட்டதாகவும் மனுவில் கூறப்பட்டுள்ளது. இந்த வழக்கு தலைமை நீதிபதி சஞ்சீவ் பானர்ஜி, நீதிபதி செந்தில்குமார் ராமமூர்த்தி அமர்வில் விசாரணைக்கு வந்தது.

அப்போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் வி.ராகவாச்சாரி ஆஜராகி, நீட் தேர்வு நடைமுறையை புறந்தள்ளும் வகையில் தமிழ்நாடு அரசு குழு அமைத்திருப்பதாக குற்றம்சாட்டினார். தமிழ்நாடு அரசு தலைமை வழக்கறிஞர் ஆர்.சண்முகசுந்தரம் ஆஜராகி தேர்தல் அறிக்கையில் உத்தரவாதம் அளிக்கப்பட்டதன் அடிப்படையில், கொள்கை முடிவு எடுக்கப்பட்டு குழு அமைக்கப்பட்டதாக தெரிவித்தார். மேலும், குழு அமைப்பது தொடர்பாக உச்ச நீதிமன்றத்தின் அனுமதி பெறப்பட்டதா எனவும் கேள்வி எழுப்பினர். அரசிடம் விளக்கம் பெற்று தெரிவிக்க அவகாசம் வேண்டுமென அரசு தலைமை வழக்கறிஞர் கோரிக்கை வைத்தார்.




**பெரம்பூர் மாதவரம் நெடுஞ்சாலை பகுதியிலுள்ள டான்பாஸ்கோ பள்ளியில் உள்ள கொரோனா சிறப்பு முகாம் மையத்திற்கு பாலகிருஷ்ணன் அறக்கட்டளை சார்பாக உணவுப் பொருட்கள் மற்றும் 1000 தண்ணீர் பாட்டில்கள் கொரோனா நிவாரணமாக வழங்கப்பட்டது...**

# புதிய குடும்ப அட்டைகளுக்கு ஒப்புதல் அளிக்கும் பணி தொடக்கம்; மீண்டும் கைவிரல் ரேகை முறை: அரசு அறிவிப்பு



கொரோனா பெருந்தொற்றுப் பரவல் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவி வழங்கும் பொருட்டு அரசால் ரூ.4000/- இரு தவணைகளில் ரூ.2000/ வீதம் மே 2021 மற்றும் ஜூன் 2021 மாதங்களில் வழங்க ஆணையிடப்பட்டது. மேலும் ஜூன் 2021 மாதத்தில் நிவாரணத் தொகை ரூ.2000/- உடன் 14 மளிகைப் பொருட்கள் வழங்கவும் ஆணை யிடப்பட்டது.

புதிய மின்னணு குடும்ப அட்டை கோரி விண்ணப்பித்த மனுக்கள், அரசால் அறிவிக்கப்பட்ட கொரோனா நிவாரணத் தொகை மற்றும் 14 மளிகைப் பொருட்களின் தொகுப்பு வழங்கும் பணி மேற்கொள்ளப்பட்ட நிலையிலும், புதிய மனுக்களை ஒப்புதல் அளிக்கும் பட்சத்தில் கூடுதலாக நிதி ஒதுக்கீடு கோர வேண்டிய நிலை ஏற்படும் என்பதாலும், கொரோனா நோய்த் தொற்றுப் பரவல் காரணமாக களப் பணியாளர்களால் விசாரணைக்குச் செல்ல இயலாத சூழ்நிலை காரணமாகவும், தகுதியான மனுக்களை ஒப்புதல் அளிப்பதற்கான சேவையும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

தற்போது நிவாரண உதவித்தொகை 98.59 சதவீதம், 14 மளிகைப் பொருட்கள் அடங்கிய தொகுப்பு 93.99 சதவீதம் வரை வழங்கப்பட்டுள்ளது. இம்மாத இறுதிக்குள் முழுவதுமாக விநியோகம் முடிக்கப்படும் நிலையில் உள்ளதால், 01.07.2021 முதல் புதிய குடும்ப அட்டை ஒப்புதல் அளிக்கும் சேவை, புதிய குடும்ப அட்டை அச்சிடும் பணியை மேற்கொள்வதற்கும் மற்றும் கைவிரல் ரேகைப் பதிப்பினையும் மீள செயல்முறைப்படுத்தவும் அனுமதி வழங்கப்படுகிறது". இவ்வாறு தமிழக அரசு தெரிவித்துள்ளது.

# உடனே நீக்க வேண்டிய செயலிகள்!

மனித உடலில் கொரோனா வைரஸ் பரவி பாதிப்பை ஏற்படுத்துவதைப்போல், அறி திறன்பேசி செயலிகளிலும் வைரஸ்கள் பரவி பாதிப்பை ஏற்படுத்திவிடுகின்றன.

இது செல்லிடப் பேசிகளுக்கு மட்டும் பாதிப்பாக அமைவதில்லை. மாறாக அதில் உள்ள தகவல்கள் திருடப்பட்டு நமக்கு பொருளாதாரப் பாதிப்புகளையும் ஏற்படுத்தி விடுகின்றன.

இதுபோன்ற அபாயகரமான அறி திறன்பேசி வைரஸ்களில் ஒன்றுதான் "ஜோக்கர்". கடந்த ஆண்டு ஜூலை மாதம் ஆன்ட்ராய்டு செயலிகளில் இந்த வைரஸ் இருப்பதைக் கண்டுபிடித்த கூகுள், அதை நீக்கியது.

தற்போது எட்டு ஆன்ட்ராய்டு செயலிகளில் அந்த வைரஸ் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆக்ஸிலியரி மெசேஜ், பாஸ்ட் மேஜிக் மெசேஜ், ஃபிரி காம்ஸ்கேனர், சூப்பர் மெசேஜ், எலிமென்ட் ஸ்கேனர், கோ மெசேஜஸ், டிராவல் வால்பேப்பர்ஸ், சூப்பர் எஸ்எம்எஸ் ஆகிய எட்டு செயலிகளில் ஜோக்கர் வைரஸ் உள்ளதாகக் கூறி கூகுள் நீக்கி உள்ளது. இந்த வைரஸ் அறிதிறன் பேசிகளில் உள்ள தகவல்களையும், எஸ்எம்எஸ்களையும், தொலைபேசி எண்களையும், ஓடிபி ஆகியவற்றையும் திருடி அதன் மூலம் பண மோசடியில் ஈடுபடுவதற்கு வழிவகுக்கிறது.

ஆன்ட்ராய்டு பயன்பாட்டாளர்களைக் குறிவைத்து இந்த வைரஸ் செயல் படுகிறது.

கடந்த ஆண்டு ஜூலை மாதம் 11 செயலிகளையும், அக்டோபரில் 34 செயலிகளையும் கூகுள் நீக்கி உள்ளது. இந்த செயலிகள் 1,20,000 முறை பதி விறக்கம் செய்யப்பட்டுள்ளது.

இந்த வைரஸ் பரவிய செயலிகளை கூகுள் நிறுவனம் நீக்கினாலும், அதை முன்பு பதிவிறக்கம் செய்து அழிக்காமல் வைத்திருந்தாலும் உங்கள் தகவல்கள் திருடப்படும். இதனால் இந்த எட்டு செயலிகளை வைத்திருப்பவர்கள் தாமதமின்றி அவற்றை அழிக்க வேண்டியது கட்டாயம்.

# முன்னாள் அமைச்சர் மணிகண்டன் சைதாப்பேட்டை சிறையில் இருந்து, புழல் சிறைக்கு மாற்றம்



முன்னாள் அமைச்சர் மணிகண்டன் சைதாப்பேட்டை சிறையில் இருந்து, புழல் சிறைக்கு மாற்றப்பட்டது வழக்கமான நடைமுறைதான் என சிறைத்துறை டிஜிபி விளக்கம் அளித்துள்ளார்.

திருமணம் செய்து கொள்வதாகக் கூறி, கருக்கலைப்பு செய்ய வைத்ததாக துணை நடிகை அளித்த புகாரின்பேரில் கைது செய்யப்பட்ட மணிகண்டன், சைதாப்பேட்டை கிளைச் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். சில சிறை அதிகாரிகள் உடந்தையோடு, மொபைல் ஏசி யூனிட், சோபா, மொபைல், சார்ஜர் உள்ளிட்ட வசதிகளோடு மணிகண்டன் இருப்பதை கண்டுபிடித்து, புகைப்பட ஆதாரங்களுடன் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதாகக் கூறப்பட்ட நிலையில், மணிகண்டன் புழல் சிறைக்கு மாற்றப்பட்டுள்ளார்.



# அடிமைகள் சீரழித்த மின்துறையை மீட்டது கழக அரசு: உதயநிதி!

10 ஆண்டு காலம் அடிமைகள் சீரழித்த மின்துறையை கடந்த 50 நாட்களாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான கழக அரசு மீட்டெடுத்து வருகிறது என உதயநிதி ஸ்டாலின் பேசியுள்ளார்.

தமிழ்நாடு மின் உற்பத்தி - பகிர்மான கழகத்தின் மண்டல கலந்தாலோசனை கூட்டம் அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் பேசிய சேப்பாக்கம் எம்.எல்.ஏ உதயநிதி 10 ஆண்டு காலம் அடிமைகள் சீரழித்த மின்துறையை கடந்த 50 நாட்களாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான கழக அரசு மீட்டெடுத்து வருகிறது என கூறினார்.

மேலும் TANGEDCO கலந்தாலோசனை கூட்டத்தின்போது சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதியிலுள்ள மின்துறைசார்ந்த கோரிக்கை ஆய்வின்போது தெரியவந்த பிரச்சினைகள் குறித்த கோப்புகளை மாண்புமிகு அமைச்சர் செந்தில் பாலாஜி யிடம் உதயநிதி வழங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.




# ஒரு நிமிடத்தில் 26 நிரலம்ப பூரண சக்கராசனம் செய்து உலக சாதனை படைத்த பள்ளி மாணவன்

திருவள்ளூரில் பள்ளி மாணவன் ஒரு நிமிடத்தில் 26 முறை நிரலம்ப பூரண சக்கராசனம் செய்து முந்தைய சாதனைகளை முறியடித்து உலக சாதனைப் புத்தகத்தில் இடம் பிடித்துள்ளார்.

திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிபூண்டியை சேர்ந்தவர் பத்திரிகையாளர் ரங்கபாஷ்யம். இவரது மகன் யுவன் (10) தனியார் பள்ளியில் 6ஆம் வகுப்பு படித்து வருகிறார். இந்த நிலையில் இணையதளம் மூலம் நடைபெற்ற யோகாசன போட்டியில் கலந்து கொண்டு ஒரு நிமிடத்தில் 26 முறை நிரலம்ப பூரண சக்கராசனம் செய்து, ஏற்கனவே மாணவி ஒருவர் ஒரு நிமிடத்தில் 21 முறை செய்த சாதனையை முறியடித்தார்.

இதையடுத்து மாணவன் ஆர்.ஜி.யுவன் புதிய சாதனையை நிகழ்த்தி இந்தியா புக் ஆப் ரெக்கார்ட், மற்றும் ஆவ்சம் உலக சாதனை புத்தகத்தில் இடம் பிடித்துள்ளார். மாணவனை கௌரவிக்கும் வகையில் பள்ளி சார்பில் பாராட்டு விழா நடத்தப்பட்டது. இதில் கலந்து கொண்ட ஆசிரியர்கள் மற்றும் சக மாணவர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.

**தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது.**

தனக்கு ஒப்புமை இல்லாத தலைவனுடைய திருவடிகளைப் பொருந்தி நினைக்கின்றவர் அல்லாமல், மற்றவர்க்கு மனக்கவலையை மாற்ற முடியாது

# மன்னார்குடி அருகே ஓஎன்ஜிசி கச்சா எண்ணெய்க் குழாயில் உடைப்பு

## எண்ணெய் பரவியதால் வயல் நாசம்





மன்னார்குடி அருகே ஓஎன்ஜிசி கச்சா எண்ணெய்க் குழாயில் உடைப்பு ஏற்பட்டு நிலத்தில் எண்ணெய் பரவியதால் நேரடி நெல் தெளிப்பு வயல் நாசமடைந்துள்ளது.

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி அருகே உள்ள கோட்டூர் ஒன்றியம், பனையூர் கிராமத்தில், சிவக்குமார் என்பவருக்குச் சொந்தமான சுமார் ஒன்றரை ஏக்கர் விளை நிலத்துக்குக் கீழே செல்லும் கச்சா எண்ணெய்க் குழாயில் உடைப்பு ஏற்பட்டது. இதிலிருந்து வெளியேறும் கச்சா எண்ணெய், விளைநிலம் முழுவதும் பரவி வருகிறது.

கோட்டூர் ஒன்றியம் பனையூர், கோமளா பேட்டை, கீழ மருதூர் ஆகிய பகுதிகளில் ஓஎன்ஜிசி மூலம் கச்சா எண்ணெய் எடுக்கப்பட்டு, நல்லூர் கிராமத்தில் ஒன்றிணைக்கப்பட்டு பின்னர் நரிமனத்துக்குக் குழாய் மூலம் கொண்டு செல்லப்படுகிறது. அத்தகைய குழாயில் பனையூர் கிராமத்தில் இன்று உடைப்பு ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்துத் தகவலறிந்த விவசாயி சிவக்குமார் மற்றும் அப்பகுதி விவசாயிகள் நிலத்தைப் பார்வையிட்டு, செய்வதறியாது திகைத்தனர். தொடர்ந்து ஓஎன்ஜிசி அதிகாரிகளுக்கும் தகவல் தெரிவித்தனர். தகவலறிந்த திருத்துறைப்பூண்டி எம்எல்ஏ மாரிமுத்து நிகழ்விடத்தை நேரடியாக வந்து பார்வையிட்டார்.

பாதிக்கப்பட்ட விவசாயி சிவக்குமார் கூறும்போது, "தற்போது குறுவை சாகுபடிக்காக நேரடி நெல் தெளிப்பு செய்துள்ளேன். இன்று அதிகாலை தண்ணீர் பாய்ச்சுவதற்காக வாய்க்கால் மடைகளைச் சரிசெய்து விட்டுச் சென்ற நிலையில் தற்போது கச்சா எண்ணெய்க் குழாயில் உடைப்பு ஏற்பட்டு விளைநிலம் முழுவதும் கச்சா எண்ணெய் பரவி வருகிறது.

நிலம் பழைய நிலைக்குத் திரும்ப ஓரிரு ஆண்டுகள் ஆகிவிடும். எனவே, ஓஎன்ஜிசி அதிகாரிகள் உடனடியாக வந்து நிலத்தைப் பார்வையிட்டு உடைப்பைச் சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதோடு, ரூ.10 லட்சம் இழப்பீடு வழங்க வேண்டும்" என்று தெரிவித்தார்.

# கொரோனா 3வது அலை முன்னேற்பாடு; ரூ.100 கோடி ஒதுக்கீடு

## முதல்வர் ஸ்டாலின் உத்தரவு

முதலமைச்சர் பொதுநிவாரணநிதியிலிருந்து, கொரோனா நோய் சிகிச்சைக்காக அரசு மருத்துவமனைகளுக்குத் தேவைப்படும் திரவ மருத்துவ ஆக்சிஜனை வாங்குவதற்காகவும், இந்தத் தொற்றின் மூன்றாம் அலை தொடர்பான முன்னேற்பாடு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவும், 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். தமிழக மக்கள் அனைவரும் தமிழக அரசின் கொரோனா தடுப்பு முயற்சிகளுக்கு கை கொடுக்கின்ற வகையில் நிதி வழங்க வேண்டுமென்று முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள் விடுத்ததற்கிணங்க, இன்று வரை 353 கோடி ரூபாய் நன்கொடையாகப் பெறப்பட்டுள்ளது.

முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு அளிக்கப்படும் நன்கொடைகள், கொரோனா நிவாரணப் பணிகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்படும் என உறுதியளித்தவாறே, இதுவரை பெறப்பட்டுள்ள நிதியிலிருந்து, ரெம்டெசிவிர் போன்ற உயிர் காக்கும் மருந்துகளை அரசு மருத்துவமனைகளுக்கு வழங்குவதற்காகவும், மற்ற மாநிலங்களிலிருந்து திரவ ஆக்சிஜனை ரயில் போக்குவரத்து மூலமாக கொண்டு வருவதற்குத் தேவையான கண்டெய்னர்களை வாங்குவதற்காகவும், முதற்கட்டமாக 50 கோடி ரூபாயை வழங்கிடவும், இரண்டாவது கட்டமாக கொரோனா பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக ஆர்டிபிசிஆர் பரிசோதனைகள் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு நாள்தோறும் 1.6 லட்சம் அளவுக்கு மேற்கொள்ளப்பட்டு வருவதைக் கருத்தில்கொண்டு, இப்பரிசோதனைகளை மேற் கொள்வதற்கான ஆர்டிபிசிஆர் கிட் களை வாங்குவதற்கு 50 கோடி ரூபாயை



வழங்கிடவும் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஏற்கெனவே ஆணையிட்டிருந்தார்.

இதனையடுத்து, சிப்காட் நிறுவனம் மூலம், சிங்கப்பூர் மற்றும் பிற வெளிநாடுகளிலிருந்து ஆக்சிஜன் உருளைகள், ஆக்சிஜன் செறிவூட்டிகள் மற்றும் இதர மருத்துவக் கருவிகளை வாங்குவதற்கு 41.40 கோடி ரூபாயினையும், கருப்புப் பூஞ்சை நோய் சிகிச்சைக்காக தேவைப்படும் ஆம்போடெரிசின் உள்ளிட்ட அனைத்து உயிர் காக்கும் மருந்துகளை வாங்குவதற்கு 25 கோடி ரூபாயினையும் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்தும் ஆணையிட்டிருந்தார்.

தற்போது முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து, கொரோனா நோய் சிகிச்சைக்காக அரசு மருத்துவமனைகளுக்குத் தேவைப்படும் திரவ மருத்துவ ஆக்சிஜனை வாங்குவதற்காகவும், இந்தத் தொற்றின் மூன்றாம் அலை தொடர்பான முன்னேற்பாடு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவும் 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆணையிட்டுள்ளார்". இவ்வாறு தமிழக அரசு தெரிவித்துள்ளது.

# ஒரே பெண்ணுக்கு 10 நிமிடத்தில் 3 தடுப்பூசி; அதிர்ச்சி சம்பவம்

மகாராஷ்டிராவில் பெண் ஒருவருக்கு அடுத்தடுத்த சில நிமிடங்களில் 3 டோஸ் தடுப்பூசிகள் போடப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மகாராஷ்டிரா மாநிலம் தானே மாநகராட்சி ஊழியர் ஒருவரின் மனைவி ஆனந்த்நகரில் உள்ள ஒரு

தடுப்பூசி மையத்தில் தடுப்பூசி போடச் சென்று உள்ளார். அங்கு அவருக்கு 10 முதல் 15 நிமிடங்களுக்குள் 3 தடுப்பூசி டோஸ்கள் செலுத்தப்பட்டு உள்ளன. இதுகுறித்து அவர் தனது கணவரிடம் கூறி உள்ளார். இதைத்தொடர்ந்து அவர் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்துள்ளார். மேலும், அவர் மாநகராட்சியில் பணிபுரிவதால் இதுபற்றி புகார் ஏதும் அளிக்கவில்லை என கூறப்படுகிறது.

இதுகுறித்து அந்த பெண்ணின் கணவர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில், "எனது மனைவி முதல் தவணை தடுப்பூசி செலுத்தி கொள்வதற்காக தடுப்பூசி மையத்திற்கு சென்றார். அங்கு அவருக்கு அடுத்தடுத்து 3 ஊசிகள் போடப்பட்டுள்ளது. அவருக்கு தடுப்பூசி குறித்த நடைமுறைகள் எதுவும் தெரியாததால், இதுகுறித்து அங்கு



எதும் தெரிவிக்காமல் என்னிடம் வந்து தெரிவித்தார். தடுப்பூசி செலுத்திய பின் அவருக்கு காய்ச்சல் இருந்தது. ஆனால், மறுநாள் காலையில் காய்ச்சல் குறைந்து விட்டது. இப்போது அவர் நன்றாக உள்ளார்" என தெரிவித்தார்.

இதுகுறித்து மாநகராட்சி மருத்துவ சுகாதார அதிகாரி டாக்டர் குஷ்பூ தவ்ரே தெரிவித்ததாவது: மருத்துவகுழுவினர் பாதிக்கப்பட்டவரின் வீட்டிற்குச் சென்று அவரை பரிசோதனை செய்தனர். அவர் நலமாக உள்ளார். இது குறித்து விசாரணை நடத்த ஒரு குழுவை அமைத்துள்ளோம் என கூறினார்.

# 9 வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை; இளைஞருக்கு 6 ஆண்டுகள் சிறை !

2019 ஆம் ஆண்டு புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதி அருகே வடக்கிப்பட்டியைச் சேர்ந்த 9 வயது சிறுமிக்கு, பக்கத்து வீட்டைச் சேர்ந்த உதயச்சந்திரன் என்பவர் பாலியல் தொல்லை கொடுத்துள்ளார். இது தொடர்பாக, சிறுமியின் தாய் கொடுத்த புகாரின் வழக்கு பதிவு செய்த போலீஸார் குற்றம் உறுதி செய்யப்பட்ட நிலையில் உதயச்சந்திரனை போக்சோ சட்டத்தின் கீழ் கைது செய்தனர். கடந்த 2019ல் நடந்த இந்த சம்பவம் குறித்த வழக்கானது புதுக்கோட்டை மகிளா நீதிமன்றத்தில் நடந்து வந்தது. இந்த வழக்கானது தற்போது இறுதி விசாரணைக்கு வந்த நிலையில், வழக்கை விசாரித்த புதுக்கோட்டை மகிளா நீதிமன்ற நீதிபதி முனைவர் சத்யா, " குற்றவாளிக்கு 6 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனையும், ரூ.50,000 அபராதமும் விதித்துத் தீர்ப்பளித்தார்.


அபராதத்தைக் கட்டத்தவறும் பட்சத்தில் மேலும் 1 வருடம் கடுங்காவல் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டார். மேலும் பாதிக்கப்பட்ட சிறுமியின் குடும்பத்திற்கு ரூ.2,00,000 அரசு சார்பில் இழப்பீடு வழங்கவும் உத்தரவிட்டார். இதையடுத்து, குற்றவாளி திருச்சி மத்திய சிறையில் அடைக்கப்பட்டார். அரசு தரப்பில் அரசு வழக்கறிஞர் அங்கவி ஆஜராகி வாதாடினார். மேலும், இந்த வழக்கு தொடர்பாகச் சிறப்பாகப் புலன் விசாரணை மேற்கொண்ட காவல் ஆய்வாளர் கருணாகரன், முதல் நிலை காவலர் நாகநாதன் ஆகியோரை புதுக்கோட்டை மாவட்ட எஸ்பி நிஷா பார்த்திபன் வெகுவாகப் பாராட்டினார்.

**அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால் பிறவாழி நீந்தல் அரிது.**

அறக்கடலாக விளங்கும் கடவுளின் திருவடிகளைப் பொருந்தி நினைக்கின்றவர் அல்லாமல், மற்றவர் பொருளும் இன்பமுமாகிய மற்ற கடல்களைக் கடக்க முடியாது

**சினிமா செய்திகள்**

# ரஜினிக்கு மட்டும் என்ன ஸ்பெஷல்?'







அமெரிக்கா செல்ல இந்தியர்களுக்கு தடையுள்ள நிலையில், ரஜினி மட்டும் சிகிச்சைக்காக சென்றது மர்மமாக உள்ளது' என, நடிகை கஸ்தூரி கூறியுள்ளார்.

அண்ணாத்த படப்பிடிப்பை முடித்து, அமெரிக்காவுக்கு சென்று சிகிச்சை மேற்கொள்ள திட்டமிட்ட ரஜினி, இதற்காக மத்திய அரசிடம் அனுமதி கேட்டிருந்தார். அனுமதி கிடைத்த நிலையில், கடந்த வாரம் ரஜினிக்கு சிகிச்சை நல்லபடியாக முடிந்துள்ளது. சில வாரம் ஓய்வுக்கு பின், இந்தியா திரும்ப உள்ளார்.இந்நிலையில், ரஜினி அமெரிக்கா சென்றது குறித்து, நடிகை கஸ்தூரி, 'டுவிட்டரில்' கேள்வி எழுப்பியுள்ளார். அவர் கூறியுள்ளதாவது:கொரோனா காரணமாக, இந்தியர்கள் மே மாதம் முதல் நேரடியாக அமெரிக்கா செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

மருத்துவ விதிவிலக்குகள் எதுவும் வழங்கப்படவில்லை. பின், எப்படி இந்த நேரத்தில் ரஜினி பயணம் செய்தார்? அவர் அரசியலில் இருந்து விலகியது உள்ளிட்ட எதுவும் சரியாகப் படவில்லை. இதை ரஜினி தான் தெளிவுபடுத்த வேண்டும்.அமெரிக்காவில் பணிபுரியும் இந்தியர்கள் அல்லது படிப்பவர்கள் மட்டும், அமெரிக்கா திரும்ப அனுமதிக்கப்படுகிறது. அதுவும் மற்ற நாடுகளின் வழியே தான் அனுமதி கிடைக்கிறது.ரஜினி, இந்திய அரசிடமிருந்து மருத்துவ விலக்கு பெற்று பயணித்து இருக்கலாம். இந்தியாவில் சிறந்த மருத்துவமனைகள் உள்ள நிலையில், ரஜினிக்கு சிகிச்சை தர முடியாத அளவுக்கு என்ன பாதிப்பு உள்ளது என்பதையும் அவர் தெளிவுபடுத்த வேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# விஷ்ணு விஷால் கதாபாத்திரத்தில் அக்ஷய்குமார்.. ?



விஷ்ணு விஷால் திரையுலக வாழ்க்கையில் முக்கிய படமாகவும் அமைந்தது. சைக்கோ திரில்லர் படமாக தயாராகி இருந்தது. நாயகியாக அமலாபால் நடித்து இருந்தார். ராம்குமார் இயக்கி இருந்தார். இந்த படத்தை மற்ற மொழிகளில் ரீமேக் செய்ய ஆர்வம் காட்டினர்.

ராட்சசன் படத்தின் தெலுங்கு ரீமேக்கில் பெல்லம்கொண்டா சீனிவாஸ் நடிக்கிறார். இந்தியிலும் ராட்சசன் படத்தை ரீமேக் செய்கின்றனர். இந்தியில் விஷ்ணு விஷால் கதாபாத்திரத்தில் நடிப்பது யார் என்ற எதிர்பார்ப்பு நிலவியது. ஆயுஷ்மான் குரானா பெயர் அடிபட்டது.

இந்நிலையில் அக்ஷய்குமார் ராட்சசன் இந்தி ரீமேக்கில் நடிக்க உள்ளதாக தற்போது தகவல் வெளியாகி உள்ளது. அவரே படத்தை தயாரிக்க இருப்பதாகவும் ரமேஷ் வர்மா இயக்க இருப்பதாகவும் கூறப்படுகிறது.

# 'கே.ஜி.எ.ஃப் 2' வெளியீட்டுத் தேதி முடிவு

'கே.ஜி.எ.ஃப்' படத்தைத் தொடர்ந்து 'கே.ஜி.எ.ஃப் 2' தயாரிப்பில் உள்ளது. இதன் படப்பிடிப்பு முழுமையாக முடிந்து, இறுதிக்கட்டப் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. பிரசாந்த் நீல் இயக்கியுள்ள இந்தப் படத்தில் யாஷ், சஞ்சய் தத், ரவீனா டண்டன், பிரகாஷ் ராஜ், ஸ்ரீநிதி ஷெட்டி உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி என ஒரே சமயத்தில் அனைத்து மொழிகளிலும் 'கே.ஜி.எ.ஃப் 2' வெளியாகவுள்ளது. இந்தப் படத்தின் இறுதிக்கட்டப் பணிகளை கவனித்துக் கொண்டே, பிரபாஸ் நடித்து வரும் 'சலார்' படத்தையும் இயக்கி வருகிறார் பிரசாந்த் நீல். ஜூலை 16ம் தேதி 'கே.ஜி.எ.ஃப் 2' வெளியாகும் எனப் படக்குழுவினர் அதிகாரபூர்வமாக அறிவித்தனர். ஆனால், கொரோனா 2வது அலையின் தீவிரத்தால் படத்தின் இறுதிக்கட்டப் பணிகளில் தொய்வு ஏற்பட்டது. இதனால் படத்தின் வெளியீடு தள்ளிவைக்கப்பட்டது.

தற்போது கொரோனா 2வது அலையின் தீவிரம் குறைந்துவருவதால், படத்தின் இறுதிக்கட்டப் பணிகளைத் தீவிரப்படுத்தியுள்ளது படக்குழு. இதுவரை 95% பணிகள் முடிந்துள்ளன. இதனைத் தொடர்ந்து இதர மொழிகளின் டப்பிங் பணிகளை முடிக்க வேண்டும். இதனால் செப்டம்பர் 9ம் தேதி 'கே.ஜி.எ.ஃப் 2' படத்தை வெளியிடப் படக்குழு முடிவு செய்துள்ளது.

**விளையாட்டு செய்தி**

## உலகக் கோப்பை வில்வித்தை போட்டி

# 3 தங்கப் பதக்கங்கள் வென்ற தீபிகா குமாரி



உலகக் கோப்பை வில்வித்தை போட்டியில் இந்தியாவின் நட்சத்திர வீராங்கனை தீபிகா குமாரி மூன்று தங்கப்பதக்கங்களை வென்று சாதனை படைத்திருக்கிறார்.

உலகக் கோப்பை வில்வித்தை போட்டி பாரீஸில் நடந்து வருகிறது. இதில் பெண்கள் பிரிவில் தீபிகா, கோமாலிக்கா, அங்கிதா குழு மெக்சிகோவை 5 1 என்ற செட் கணக்கில் வென்றது.

பின்னர் கலப்பு பிரிவில் தனது கணவர் அனுதானு தாஸுடன் பங்கேற்ற தீபிகா நெதர்லாந்து ஜோடியை 5 3 என்ற கணக்கில் தோற்கடித்தனர். அடுத்து பெண்களுக்கான தனி நபர் பிரிவில் ரஷ்யாவின் எலினாவை 6 0 என்ற கணக்கில் எளீதாக வென்று தங்கப் பதக்கத்தை வென்றார் தீப்கா.

இதன் மூலம் உலகக் கோப்பை போட்டியில் மூன்று தங்கப் பதக்கங்களை அவர் கைபற்றியுள்ளார். இந்த வெற்றிகளின் மூலம் உலக வில்வித்தை பெண்கள் தரவரிசை போட்டியில் முதல் இடத்துக்கு அவர் முன்னேறி இருக்கிறார்.

வெற்றி பெற்றது குறித்து தீபிகா கூறும்போது, " உலகக் கோப்பை போட்டியில் மூன்று பதக்கங்களை நான் வெல்வது இதுதான் முதல் முறை. நான் மிகுந்த மகிழ்ச்சியாக இருக்கிறேன். அதே வேளையில் வரும் போட்டிகளுக்காக கூடுதலாக என்னை நான் தயார்ப்படுத்தி கொள்ள வேண்டும்" என்றார்.

இதுவரை உலகக் கோப்பை வில்வித்தை போட்டிகளில் தீபிகா 9 தங்கப்பதக்கங்களையும், 12 வெள்ளி மற்றும் 7 வெண்கல பதக்கங்களையும் வென்றிருக்கிறார்.





# யூ டியூப் பார்த்து நாட்டு துப்பாக்கி தயாரிப்பு.. அதிர்ச்சியில் தமிழக போலீசார் !!

கடலூர் மாவட்டம் குள்ளஞ்சாவடி அருகேயுள்ள பெருமாள் ஏரிக்கரையில் சமூக விரோத நடவடிக்கைகள் நடப்பதாக போலீசாருக்கு புகார்கள் குவிந்தன. இதனையடுத்து போலீசார் அப்பகுதியில் கண்காணிப்பில் ஈடுபட்டனர். அப்போது சந்தேகப்படும் படி சுற்றிதிரிந்த இருவரை பிடித்து விசாரித்தனர். இருவரும் உளறிய நிலையில் விசாரணையை தீவிரப்படுத்தினர்.

மேலும் அவர்களை சோதனையிட்டத்தில் இருவரிடம் இரண்டு நாட்டு துப்பாக்கிகள் இருந்தது தெரியவந்தது. துப்பாக்கி எப்படி கிடைத்தது என்று போலீசார் விசாரித்தப்போது அவர்கள் அளித்த பதில் அதிர்ச்சியை அளித்தது. அதாவது யூடியூப் பார்த்து மரக்கட்டை, இரும்பு பொருட்களை கொண்டு தாங்களே நாட்டு துப்பாக்கி தயாரித்ததாக கூறினர்.

ஏரிக்கரையில் முயல் உள்ளிட்ட விலங்குகளை வேட்டையாட இந்த துப்பாக்கியை பயன்படுத்தியதாகவும் கூறினர். இதையடுத்து விஜய் (28), கவியரசன்(21) ஆகிய இருவரையும் கைது செய்தனர்.

யூடியூப் பார்த்து சாராயம் காய்ச்சுவது, நாட்டு வெடிகுண்டு செய்வது, துப்பாக்கி செய்வது என்று தற்போது சமூக விரோத செயல்களில் ஈடுபட்டு வருவது பொதுமக்களிடையே ஒரு அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது.

**பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க நெறிநின்றார் நீடுவாழ் வார்**

ஐம்பொறி வாயிலாக பிறக்கும் வேட்கைகளை அவித்த இறைவனுடைய பொய்யற்ற ஒழுக்க நெறியில் நின்றவர், நிலை பெற்ற நல்வாழ்க்கை வாழ்வர்

## CM HANDS OVER RELIEF TO FAMILY OF SECURITY GUARD WHO WAS KILLED



Tamil Nadu Chief Minister M.K. Stalin on Friday handed over a cheque of Rs. 5 lakh as relief to family members of an on-contract security guard at a temple, who was killed by robbers.

T. Babu, was killed while on duty, when robbers attempted to rob the Arulmigu Theerthabaleeswarar Temple.

The CM also handed over a cheque of Rs. 5 lakh as relief to family members of Divakar, who was killed in the scaffolding collapse incident in Arulmigu Nagappa Chetty Pillayar Temple.

Minister for Hindu Religious and Charitable Endowments P.K. Sekar Babu, Commissioner of HR&CE J. Kumaragurubaran and Chepauk-Thiruvallikeni MLA Udhayanidhi Stalin were present.

## WORLDS BEST 100 MEDICAL COLLEGES RELEASED!

### 2 MEDICAL COLLEGES FROM TAMIL NADU!

A list of the world's best 100 Medical Colleges has been released recently! It is indeed a matter of pride that 2 colleges from Tamil Nadu has secured places on this prestigious list!

Vellore Christian Medical College has secured the 49th place!

Chennai Medical College has secured the 64th place!

In a total perspective of the country (India), 6 medical colleges have secured places in this list of TOP 100 MEDICAL COLLEGES IN THE WORLD!





AIIMS (All India Institute of Medical Science) Medical College has secured 23rd place!

Pune Military Medical College has secured the 34th place!

Further, Puducherry JIPMER Medical college has secured 59th place!

Varanasi Institute of Medical Science Medical College has secured 72nd place!

## VALIDITY OF THE CHENNAI METRO RAIL, SEASON TICKET CARDS EXTENDED!

The validity of the season ticket cards for the Chennai Metro Rail Services, which remained unused due to the non-operation of the Chennai Metro Rail Services because of the prevailing crisis of the raging resurgent coronavirus pandemic has now been extended.

The regular commuters of the Chennai Metro Rail had doubted whether the season tickets bought before the lockdown imposition would be valid!

With the validity of the season tickets for the Chennai Metro Bus Services having been extended already, the public expected this facility would be repeated for the season tickets for the Chennai Metro Rail services as well!

In this scenario, the Chennai Metro Rail Company has come up with the statement that the validity of the season tickets would be extended to utilise the balance number of trips remaining unused!

Chennai Metro Rail has further appealed to its customers to approach the Customer Service counter in each Chennai Metro Station!

## BE CAREFUL!
## DELTA PLUS VARIANT CASES INCREASE IN CHENNAI AND IN TAMIL NADU NOW!!

People belonging to TN have been affected badly in the first as well as in the second Coronavirus infection wave is well known. We have been hearing that the new Delta Plus variant has been creating issues across India and the cases have been increasing slowly.

The shocking piece of information is that in Chennai city as many as 7 Delta Plus variant cases and one case each in Kancheepuram and Madurai districts have been reported till now. This has made many to worry.

It must be noted that there are till now 48 Delta Plus variant cases in India from the 45,000 samples that have been tested. The state of Maharashtra has now got as many as 20 such variant cases and that is the highest tally for any state in India and is followed by Tamil Nadu with 9 such variant cases.

It has been brought to light by some officials that 3 out of 1159 samples sent for genomic sequencing by Tamil Nadu Directorate of Public Health and Preventive Medicine DPH have been tested and results have been awaited for another 380 samples. Point is that 2 patients have recovered and one patient died and the other 6 Delta Plus variant cases from ICMR-NIE samples have recovered from Covid-19 infection.

Health minister Mr. M. Subramanian was of the view that many people would have been affected by the new variant during the second wave. He added that it had no unprecedented effect or spread factor and the same treatments were given to the patients with new variants also. It is worthy to mention that those affected with the new variant are stable and their relatives who were tested upon contact tracing are also doing well. Unless there is new strain, there would not be any change in protocol and vaccine effectiveness needs to be studied.



## ELECTRICITY CONNECTION WITHIN 3 DAYS AFTER APPLICATION!

The Director for the Electricity Distribution has emphasised that the TANGEDCO workers MUST ENSURE GIVING NEW ELECTRICITY CONNECTIONS FOR THE CITIZENS WHO HAVE APPLIED FOR FRESH ELECTRICITY CONNECTION.

In a notification released in this regard by the Director of Electricity Distribution, it is mentioned:

All the grievances from customers MUST BE ATTENDED WITHIN 3 DAYS.

No application should be kept pending!

In case the complaints are NOT duly attended within the STIPULATED TIME, DISCIPLINARY ACTION WILL BE TAKEN ON THE CONCERNED STAFF!

THE CHIEF ENGINEER MUST CLOSELY MONITOR AND CONFIRM THAT ATTENDING TO ALL GRIEVANCES FROM CUSTOMERS ARE EX[EDITEED!

**METRO PEOPLE**
English & Tamil Fortnightly

Editor:
**S. SUDHA**

Sub-Editor:
**S. Surendran**

Reporter:
**S.S. Anand**
**M. Saravanan**


Photographer:
**A.K. Karthick**

Layout Artist:
**S. Rajkumar**

Publication Address

Door No. 43, Old No. 22, Real Enclave,
Flat No. 1, 4th Floor, Office No. 401,
Josier Street, Nungambakkam,
Chennai - 600 034

**87544 44937**



# COOKU WITH COMALI ASHWIN DEBUT AS HERO




Ashwin, who became famous with the popular TV show "Cooku with Comali", will be making his debut in the lead role in a movie directed by Hariharan, an ad filmmaker turned feature film director.

Revealing details of the movie titled "Enna Solla Pogirai", the director who has also made a web series titled "Ctrl Alt Del", tells that the new movie is going to be a romantic comedy.

Not just this, Pugazh who is also famous from "Cooku with Comali" will also be playing an important role in the movie. "Enna Sola Pogirai" is produced by Trident Arts' R Ravindran. The director is quick to share his excitement that the movie title was inspired by the super hit song from "Kandukondain Kandukondain". The music will be by Vivek-Mervin who composed the music for "Dharala Prabhu", "Sulthan" to name a few. The director adds that the movie will be a youthful musical that has an urban backdrop and hence the shooting will take place in Chennai.

The director is looking for newcomers as the makers want a fresh pairing for this triangle love story. Durairaj is the editor and Richard M Nathan is handling the camera. Shooting for the movie will commence on July 19th.



# HEREAFTER, STRICT DRESS CODE FOR THE STUDENTS AND TEACHERS DURING ONLINE CLASSES IN TN

Hereafter, the students as well as teachers in TN cannot wear dresses as per their choices during the online classes!!

The news that has emerged out now is that the school education department has suggested a dress code for both students and teachers during the online classes. Schools must place safety boxes to receive complaints and feedback from the students. This was mentioned in the new guidelines for safety and protection issued by the school education department.

It must be remembered that some days back a Chennai based school teacher was held for sexually harassing the students during the online class. Many complaints were received regarding this issue and due to this the TN government had set up a committee led by the school education commissioner to come up with suitable guidelines for the online classes.

Information is that the school education department has mandated all types of schools in TN to set up a student safeguarding advisory committee headed by the principal to monitor, review and recommend steps at the institutional levels on all aspects of student's safety.

Two teachers, 2 parents and 1 representative each from the management, non-teaching staff and an external member would be present in the committee. Principal would be a permanent member and every year 50percent of the committee members would be replaced and no members would be there for more than 2 years. This was according to the guidelines.

It was mentioned that all online classes should be recorded and there would be a random audit by a quorum of students safeguarding the advisory committee undertaken periodically. For taking suitable action, the feedback would be reviewed periodically.

A register must be maintained by the school level committee to document all the complaints and conducts of sexual misconduct received by the school management and administration by whichever mode of communication.

A state level central complaint centre of CCC would be set up by the school education department with a hotline facility and dedicated email-id to receive the complaints of sexual abuse in the schools. It has been brought out that upon receipt or knowledge of sexual abuse the school level committee would immediately inform the central complaint centre.



# RESUMPTION OF OMNIBUS SERVICES IN TAMIL NADU

Due to the prevailing crisis of the raging resurgent coronavirus pandemic for the last18 months or more, various public utility services including trains, flights and buses including omnibuses remain stopped!

As such, the public has been put to great hardship for their travel! So, the question has arisen among the public regarding the resumption of omnibus services in Tamil Nadu.

In this regard, the President of the Omnibus Owners' Association Anbazhagan shared:

"Giving due consideration to our prevailing critical the situation, we have already informed the Department of Transport of the Tamil Nadu State Government that WE WILL NOT RESUME OPERATIONS UNTIL TAX EXEMPTION IS GRANTED FOR THE PERIOD APRIL, MAY, AND JUNE.

As such, only by not resuming omnibus services until end June, we can obtain the tax exemption.

Hence, as per the prevailing situation, we are constrained NOT TO OPERATE THE OMNIBUS SERVICES.

However, the operation of a few omnibuses will be resumed from today (Tuesday, 29th June. All arrangements are being made to ensure resumption of 100% omnibus services operations from 1st July!"

As such, with the proposal of resumption of 100% omnibus services, the maintenance work schedule for the buses has been taken up at full swing and is in progress!



# ELECTRICITY MINISTER REVIEWS MAINTENANCE WORK DONE IN CHENNAI

Electricity Minister V. Senthilbalaji held a review meeting with officials of the Tamil Nadu Generation and Distribution Corporation (Tangedco) on Tuesday to take stock of the maintenance work completed within 10 days to prevent sudden power failures.

Residents have been complaining of recurring power cuts in various places.

In a press release, the Electricity Minister said the residents were found to be facing power cuts because of the failure of the previous regime to carry out regular maintenance work for more than nine months. Based on the advice of Chief Minister M.K. Stalin, Tangedco took up a massive maintenance operation all over the city between June 19 and 28 to rectify the problems.

**EQUIPMENT REPLACED**

During the 10-day period, a total of 4,162 switches were replaced, 1,327 damaged pillar boxes were removed and new ones installed, 1,223 new insulators were placed and 20,767 tree branches, affecting overhead electricity cable and distribution transformers, were cleared. Thanking senior officials and workers for executing the task, he said several developments needed to be initiated in the future.

The Minister also said the 'Minnagam' service call centre, inaugurated by Mr. Stalin, had received a total of 40,500 complaints, of which 31,000 had been rectified. The remaining complaints would be addressed within two days, he added.

Citing the huge loss of Rs. 1.5 lakh crore sustained by Tangedco due to administrative reasons during the past 10 years, Mr. Balaji said Rs. 15,000 crore was being spent for interest alone every year. He said steps were being taken to reduce the interest amount to Rs. 13,000 crore.

He alleged that the AIADMK-led government had failed to commission any power project in the past 10 years and this had resulted in the State's electricity generation reducing drastically, compared to the Central generating capacity.

# HUGE RELIEF!! AFTER NEARLY 3 MONTHS, THIS HAS HAPPENED NOW IN TAMIL NADU!!



In the month of May in TN, fresh Coronavirus cases kept on increasing and it created huge problems for many. The total lockdown has been tremendous and now after 81 days the number of fresh or new cases went down below 5000 in TN. This has been spoken highly now by many.

On Monday, 28th June 2021, the number of fresh cases went below 5000 and there were 4804 cases. It must be noted that Tamil Nadu had as many as 40954 active cases. Information is that the cumulative tally crossed 24.7lakhs and the death toll reached 32388.

Health minister, Mr. M. Subramanian expressed his thoughts. He spoke about how on 8th April TN logged 4276 fresh Covid-19 cases. He explained that the cases declined steadily and due to that restrictions were relaxed in some places. Public must not be casual now and they must still continue wearing facemasks, maintain social distance etc compulsorily.

The district of Coimbatore, Erode and Salem reported 597 cases, 506 cases respectively and 318 cases on Monday. Other districts had reported less than 300 cases only. Chennai, Trichy and Madurai districts had 291 cases, 185 cases and 78 cases respectively. Less than 100 fresh Covid-19 cases were reported in atleast 22 districts belonging to TN. It is superb to note that 50 districts had less than 50 fresh cases each. The least number of fresh Covid-19 cases were reported in the Perambalur district.

In TN, 98 deaths were reported yesterday. As many as9 deaths were reported in Madurai district and 7 deaths in Coimbatore district. Districts such as Salem, Cuddalore, Tiruvallur and Ranipet etc reported 6 deaths each. District of Kanniyakumari reported 5 deaths and others like Chennai and Trichy reported 4 deaths each. Not a single death was reported from 7 districts in TN and the recovery rate was 97% in Tamil Nadu.




# Chennai University announces free education for economically backward students!

The Registrar (in-charge) of Chennai University has released a notification:

“Facilitating the economically backward students to pursue further studies free of cost, Chennai University has implemented and executing the scheme ‘Chennai University Free Education Scheme’ from 2010.

Under this ‘Chennai University Free Education Scheme’, applications are invited for admission in the current academic year 2021-22 in the government and government-aided colleges.

The applicants must have passed+2 this year. The family annual income MUST BE UNDER Rs. 3 Lakhs.

Priority will be given in this scheme for the economically backward students, destitute students (students with no support of parents or guardians) and the students who pursue graduation course for the 1st time in their generation.

To join the free graduation course, the eligible and interested students MUST UPLOAD online THE APPLICATION FOR THE FREE EDUCATION SCHEME, THE REQUISITE CERTIFICATES/ DOCUMENTS ASKED FOR ON THE OFFICIAL Chennai University website – www. nom.ac, in – within 15 days after the release of the +@ Examination results.

The applications and other required information can be accessed from the official website of Chennai University

# SUB-INSPECTOR OF POLICE IN CHENNAI HELD FOR SEXUAL ASSAULT ON MINOR GIRL

A sub-inspector of police has been arrested and remanded on charges of sexual assault of a 15-year-old girl in Madhavaram. The offender has been identified as Sathish Kumar, 32, a resident of Tiruvallur district. He was working in a special team of police attached to the Kasimedu police station. During this period, he had been working in the Madhavaram Milk Depot area and had become acquainted with the victim’s mother, 37 while he was regulating crowds at a ration shop. He later frequently visited her house and developed a relationship with the woman.

The girl who happened to see their relationship threatened to disclose it to her father. However she was silenced by the sub-inspector who allegedly threatening her with dire consequences and threatened to finish off her father and brother. The relationship continued for a year and he frequently visited the house. His eye then fell on the girl and he made sexual advances towards her which she declined. Sathish Kumar then managed to convince the girl’s mother and aunt to force the girl to agree to his sexual advances. He tried to lure the girl with a birthday cake and a high-end mobile phone. He then gave Rs1 lakh in cash to her mother and aunt to force the girl to fall in line. Unable to bear the harassment meted out by him, she told her father what was going on. In turn, her father was threatened by the SI when he went to lodge a complaint with the police. Following publication of this by a news portal, an investigation by high-level officers was initiated. Deputy Commissioner of Police, Madhavaram E. Sundaravathanam held an enquiry and ordered the arrest. A case was booked under sections 9 (Aggravated sexual assault) (a) (Whoever, being a police officer, commits sexual assault on a child), 10(Punishment for Aggravated sexual assault) of Protection of Children from Sexual Offences (POCSO) Act and 506 (Punishment for criminal intimidation) of IPC. Sathish Kumar and the girl’s mother were lodged in prison after being produced in a court, said police.

## MEASURES TO BE TAKEN TO IMPROVE CLEANLINESS AND BETTER SOLID WASTE MANAGEMENT AT KOYAMBEDU MARKET COMPLEX



Efforts would be made to improve cleanliness at the Koyambedu wholesale market complex, Minister for Housing and Urban Development S. Muthusamy said in Chennai on Tuesday.

He inspected the flower, fruits and vegetable markets in the complex and assured the traders that the garbage in the market area would be cleared once in a few hours daily. At present, Ramky Enviro Engineers Limited, the private agency engaged for solid waste management, cleared garbage in the market premises after the business hours.

The Minister said toilet and drinking water facilities would also be improved during a meeting with traders.

Later, the Koyambedu Food Grains Traders Association presented a charter of demands to the Minister. Its president D.Manivannan said the food grains market must also be allowed to function from 3 a.m. to enable vendors visiting vegetable markets to make their purchase.

Measures must be taken to close down food grains trade carried out illegally in fruits and vegetable complex under Tamil Nadu Specified Commodities Market Act. Besides opening food grains godown, the government must also name the food grains complex after freedom fighter V.O. Chidambaram, he said.

The association also requested that the parking area in the food grains market must be used exclusively by the traders and consumers visiting the market.

# WHEN WOULD THE COLLEGE ADMISSIONS START IN TAMIL NADU?

wgrabbed many eyeballs when he mentioned that all the college admissions would start only after 31st of July 2021.The Minister and other officials took part in a meeting with the chief minister of TN regarding college admissions following the announcement of the evaluation procedure.

It is learnt that both CBSE as well as Tamil Nadu state board would declare class12 results based on the evaluation criteria before 31st July 2021.The higher education minister then pointed out that for admissions sake the colleges would have to consider the CBSE and state board marks for ranking the students. Only after 31st of July, admissions to the government, government aided and private colleges would start in Tamil Nadu.

It is shocking to note that some private colleges have already started admissions for the first year students. As per the CM order, the college admissions must start only after 31st July and the government would take action on those colleges that start admissions now. Last week, admissions to polytechnics based on class 11 marks began is known to us.

The TN government had already announced the evaluation method for calculating class 12 marks. Information collected is that class 10 board examinations would carry 50% weightage, class 11 marks would carry 20% weightage. The class 12 internal assessment and practical exams would carry the remaining 30% weightage.

Mr. Ponmudi later threw light on how there was no link between cancellation



of MPhil by Madras University and National Education Policy 2020 and the opinion was divided among teachers and students regarding the need for such a degree. Truth is that some universities have discontinued the MPhil degree. To appoint professors in TN as vice-chancellors of Anna University and Annamalai University, the TN government would take steps. To reduce the anxiety among parents and students, some Chennai colleges have started online registrations but many are yet to open their website.

Principal of famous Loyola College, Mr. Thomas Amirtham was of the view that the UG admissions could start after class 12 results only. He hinted that the first year classes might begin from late August. He concluded that the college was planning to launch a vaccination drive for the faculty members and students before the beginning of the academic year.

By just knowing the evaluation process, UG admissions cannot be conducted. This was brought out by the principal Mr. Ragunathan of popular Gurunanak college







Published & Printed by **S. SUDHA,** on behalf of **GEMBRIO MEDIA AND ENTERTAINMENT PRIVATE LIMITED** Published from Door No. 43, Old No. 22, Real Enclave, Flat No. 1, 4th Floor, Office No. 401, Josier Street, Nungambakkam, Chennai - 600 034. Printed at **CHENNAI OFFSET PRINTERS,** No.19/1, 21/2, Kitabath Khan Bahadur Street, Ellis Road, Chennai 600 002. **EDITOR: S. SUDHA.**